KOVAI MEDICAL CENTER AND HOSPITAL LIMITED
NABH Accredited Hospital Excellence in Healthcare
99, Avanashi Road, Coimbatore - 641 014. INDIA | Phone : (0422) 4323800, 4324000, 6803000
Web : www.kmchhospitals.com | CIN No : L85110TZ1985PLC001659

02.08.2024

Ref: KMCH/SEC/SE/2024-25/ 2189

To
Corporate Relationship Department
BSE Limited
1st Floor, New Trading Ring
Rotunda Building, P.J.Towers
Dalal Street, Fort
Mumbai - 400 001

Dear Sirs,

**Sub: Disclosure under Regulation 30(2) of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015.**

**Ref: Security ID: KOVAI, Security Code: 523323**

Pursuant to regulation 30(2) of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 (LODR Regulations) read with clause 20 of Para A of Part A of Schedule III of the LODR Regulations, the details of Show Cause Notice received by the Company from Directorate of Industrial Safety and Health Department are enclosed herewith as Annexure A.

We request you to kindly take the above intimation on record.

Thanking you,

Yours truly
For Kovai Medical Center and Hospital Limited

R.Ponmanikandan
Company Secretary

Kovai Medical Center and Hospital Limited KMCH CBE-14

EXCELLENCE IN HEALTH CARE 30th 1990 - 2021

Annexure-A

Show Cause Notice received from Directorate of Industrial Safety and Health:

| | |
|---|---|
| Name of the authority | Directorate of Industrial Safety and Health, Madurai |
| Nature and details of the action(s) taken, initiated or order(s) passed | Show Cause Notice |
| Date of receipt of direction or order, induding any ad-interim or interim orders or any other communication from the authority. | 01.08.2024 |
| Details of the Violation(s)/ contravention(s) committed or alleged to be Committed | Show Cause Notice received under Building and other Construction Workers (Regulation of Employment and Conditions of Service)Act 1996. |
| Impact on financial, operation or other activities of the listed entity, quantifiable in monetary terms to the extent possible | None- There is no material impact on financials, operations or other activities of the Company as of now. The Company is preparing to respond to the Show Cause Notice. |

Kovai Medical Center and Hospital Limited
CBE-14

பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

| அனுப்புநர் - | பெறுநர் - |
|---|---|
| திருமதி.சி.பூங்குழலி, பி.இ.,<br>இணை இயக்குநர் (BOCW),<br>தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்<br>11A/1, விநாயகர் நகர்,<br>மாவட்ட நீதிமன்றம் எதிரில்<br>மோகன் மெடிசிட்டி மருத்துவமனை அருகில்<br>மதுரை - 625 020. | **Dr.Nalla G Palaniswami,<br>Managing Director,<br>Employer/ Owner.<br>M/s. Kovai Medical Center & Hospital Ltd.,<br>99, Avinashi Road,<br>Coimbatore – 641 014.**<br>**<u>Construction Site</u>**<br>**Construction of Outpatient Block (UG + 6 Floors) in the existing hospital premises of Kovai Medical Center & Hospital Ltd.,<br>99, Avinashi Road,<br>Coimbatore – 641 014.** |

**<u>ந.க.எண் அ/2539/2024, நாள் - 29.07.2024</u>**

ஐயா

பொருள் கட்டிடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம் 1996 தமிழ்நாடு விதிகள் 2006 மற்றும் தொடர்பான சட்டங்களும் விதிகளும் - சில வழி வகைகளின் முரண்பாடுகள் காணப்பட்டது - காரணம் கோரும் அறிக்கை வழங்குதல் - தொடர்பாக,

பார்வை ஆய்வறிக்கையின் சுருக்கம் நாள் - 01.07.2024.

********

01.07.2024 அன்று முற்பகல் 09.30 மணியளவில் தங்கள் கட்டுமான வளாகத்தில் நடைபெற்ற கூட்டாய்வின் போது கண்டறியப்பட்ட / தங்களிடம் நேரில் விளக்கப்பட்ட குறைபாடுகள் / சட்டமீறுதல்கள் மற்றும் பார்வையில் காணும் இவ்வலுவலக ஆய்வறிக்கையின் இனம் 01 முதல் 04 வரையிலான முரண்பாடுகளுக்கு ஏன் தங்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரக் கூடாது என்பதற்கான காரணங்களை இக்கடிதம் கிடைக்கப்பெற்ற 7 (ஏழு) நாட்களுக்குள் எழுத்து மூலம் இவ்வலுவலகத்திற்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது,

குறிப்பிட்ட காலவரையறைக்குள் தங்களிடமிருந்து மறுமொழி ஏதும் வரப்பெறவில்லையெனில் அளிக்கத்தக்க காரணம் / விளக்கம் ஏதும் தங்களிடம் இல்லை எனக் கருதி மேற்கோண்டு அறிவிப்பு ஏதுமின்றி தங்கள் மீது தக்க நடவடிக்கை தொடரப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது,

<u>கூட்டாய்வு உறுப்பினர்கள்</u>

1) திருமதி.சி.பூங்குழலி, பி.இ.,
இணை இயக்குநர் (BOCW), தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், மதுரை,

1. திரு.இ.கீர்த்திவேல் ராஜேஷ்,
துணை இயக்குநர் (BOCW), தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், கோவை.

இணை இயக்குநர் (BOCW) 29/7/24

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், மதுரை,

<u>நகல் பணிந்தனுப்பப்படுகிறது</u>

இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை,

## தமிழ்நாடு அரசு
## தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

| அனுப்புநர் - | பெறுநர் - |
|---|---|
| திருமதி.சி.பூங்குழலி, பி,இ.,<br>இணை இயக்குநர் (BOCW),<br>தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,<br>11A/1, விநாயகர் நகர்,<br>மாவட்ட நீதிமன்றம் எதிரில்<br>மோகன் மெடிசிட்டி மருத்துவமனை அருகில்<br>மதுரை - 625 020. | **Dr. Nalla G Palaniswami,**<br>**Managing Director,**<br>**M/s. Kovai Medical Center & Hospital Ltd.,**<br>**99, Avinashi Road,**<br>**Coimbatore – 641 014.**<br>**<u>Construction Site</u>**<br>**Construction of Outpatient Block (UG + 6 Floors) in the existing hospital premises of Kovai Medical Center & Hospital Ltd,**<br>**99, Avinashi Road, Coimbatore – 641 014.** |

<u>எண்.CBE.க.ம.இ.க.நி/ 2024, நாள் - 29.07.2024</u>

ஐயா

பொருள் கட்டிடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம் 1996 தமிழ்நாடு விதிகள் 2006 மற்றும் தொடர்பான சட்டங்களும் விதிகளும் - சில வழி வகைகளின் முரண்பாடுகள் காணப்பட்டது - ஆய்வறிக்கை சுருக்கம் அனுப்பப்படுகிறது - தொடர்பாக.

பார்வை ஆய்வு நாள் - 01.07.2024.

*******

தங்களது கட்டுமான பணியிடத்தில் கூட்டாய்வின் போது, கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி வரைமுறைகள்) சட்டம் 1996 மற்றும் தமிழ்நாடு விதிகள் 2006 கீழ் கண்டறியப்பட்ட சட்டவிதிகளின் முரண்பாடுகள் குறித்து எமது ஆய்வறிக்கையின் சுருக்கம் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

இணைப்பு- ஆய்வறிக்கை சுருக்கம்

29/7/24

இணை இயக்குநர் (BOCW)

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், மதுரை.

<u>குறிப்புரை - இயக்குநர்,</u> தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை, அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

29/7/24

1. 01.07.2024 அன்று முற்பகல் 09.30 மணி
2. ஆய்வு நாளன்று வேலை நடைபெற்றது
3. 51 தொழிலாளர்கள் ( 51 ஆண்கள் )
4. மரண விபத்து கூட்டாய்வு
5. **Managing Director/ Employer**- க்கு காரணம் கோரும் அறிக்கை வழங்கப்படுகிறது

## ஆய்வறிக்கை சுருக்கம்

## கட்டிடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம் 1996 மற்றும் தமிழ்நாடு விதிகள் 2006

### 1. பிரிவு 40 (1) (2) (o) விதி 42 (7)

மேற்கண்ட சட்டப்பிரிவு மற்றும் விதியில் வரையறுக்கப்பட்டுள்ளபடி கட்டிடம் மற்றும் கட்டுமான பணி நடைபெறும் இடங்களில் பணியிலுள்ள கட்டுமான தொழிலாளியோ, உபகரணங்களோ அல்லது பிற பொருட்களோ தவறி விழும் அபாயமுள்ள பணியிடங்களில் வேலையளிப்பவரால் போதுமான அளவில் தகுந்த தேசிய தரம் கொண்ட பாதுகாப்பு வலை (Safety Net) அமைத்து தரப்படவேண்டும்.

இதற்கு மாறாக எண்.99, அவிநாசி ரோடு, கோயமுத்தூர் என்ற முகவரியில் அமைந்துள்ள கோவை மெடிக்கல் செண்டர் மற்றும் மருத்துவமனை வளாகத்தில் நடைபெறும் 6 மாடிகள் கொண்ட புற நோயாளிகள் பிரிவு கட்டுமான பணியில் 70 அடி உயரத்தில் உள்ள 6வது மாடி தளத்தில் நடைபெற்ற பணிக்காக அமைக்கப்பட்டுள்ள தரைதளத்திலிருந்து கட்டுமான பொருட்களை எடுத்துச்செல்லும் Material Hoist-ற்கான நடைமேடையின் பக்கவாட்டு சாரத்தின் வழியாக கட்டுமான தொழிலாளியோ, உபகரணங்களோ அல்லது பிற பொருட்களோ தவறி விழும் அபாயமுள்ள பணியிடத்தில் போதுமான அளவில் தகுந்த தேசிய தரம் கொண்ட பாதுகாப்பு வலைகள் (Safety Nets) வேலையளிப்பவரால் அமைத்து தராமல் 27.06.2024 அன்று பிற்பகல் 05.10 மணியளவில் தரை தளத்திலிருந்து M Sand-யை Wheel Barrow-வில் ஏற்றி Material Hoist மூலமாக 6 வது மாடிக்கு கொண்டு செல்லும்போது அங்கு Material Hoist நடைமேடையில் நின்று அதை எடுத்தச்செல்லும் பணியில் சீனிவாசன் அசோசியேட்ஸ் பிரைவேட் லிட்., என்ற ஒப்பந்ததாரர் நிறுவனத்தின் வெளிமாநில ஒப்பந்த தொழிலாளி திரு. ரமேஷ் குமார், வயது 27, த/பெ. பஜன் மண்டல் என்பவரை ஈடுபடுத்தியதால், அத்தொழிலாளி Material Hoist மூலம் Wheel Barrow மேலே வருவதற்கு முன்னால் நடைமேடையில் அமைக்கப்பட்டுருந்த பாதுகாப்பு வலையிடப்படாத பக்கவாட்டு சாரத்தில் படுக்கை வாக்கில் அமைக்கப்பட்ட Handrails-ல் அமர்ந்திருந்தபோது நிலைதடுமாறி 70 அடி உயரத்திலிருந்து தரைதளத்தில் விழுந்து படுகாயமடைந்துள்ளார். உடன் கோவை மெடிக்கல் செண்டர் மற்றும் மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது அவர் மரணமடைந்ததை மருத்துவர்களால் உறுதி செய்யப்பட்டது என்பதை 01.07.2024 அன்றைய கூட்டாய்வின்போது கண்டறியப்பட்டது.

இது பிரிவு 40 (1) (2) (o) விதி 42 (7)படி முரணாகும்.

2. பிரிவு 40 (1) (2) (o) விதி 178 (a) (b):

மேற்கண்ட சட்டப்பிரிவு மற்றும் விதிகளின் படி வேலையளிப்பவரால் தேசிய தரம் வாய்ந்த பாதுகாப்பு கச்சை மற்றும் காப்பு கயிறை இணைக்கும் கருவிகளை ஒவ்வொரு தொழிலாளர்களும் அவர்தம் பாதுகாப்பிற்காக கட்டுமானப் பணியின் போது வழங்கப்பட்டு, அதை அவர்கள் அணிந்து பணிபுரிவதை உறுதி செய்யப்படவேண்டும்.

இதற்கு மாறாக எண்.99, அவிநாசி ரோடு, கோயமுத்தூர் என்ற முகவரியில் அமைந்துள்ள கோவை மெடிக்கல் செண்டர் மற்றும் மருத்துவமனை வளாகத்தில் நடைபெறும் 6 மாடிகள் கொண்ட புற நோயாளிகள் பிரிவு கட்டுமான பணியிடத்தின் வேலையளிப்பவராகிய தாங்கள் அங்கு பணிபுரியும் கட்டிட தொழிலாளர்களின் பாதுகாப்பிற்காக, அவர்களுக்கு பாதுகாப்பு கச்சை (Safety Belt) வழங்காமலும், பாதுகாப்பு காப்புக்கயிறு (Safety Life Line) அமைக்கப்படாமலும் இருந்தது 01.07.2024 அன்றைய கூட்டாய்வின்போது கண்டறியப்பட்டது.

இது பிரிவு 40 (1) (2) (o) விதி 178 (a) (b)ன் கீழ் முரணாகும்.

3. பிரிவு 44

மேற்காணும் சட்டப்பிரிவின்படி கட்டுமான பணிகள் நடைபெறும் வளாகத்தில் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், விபத்துகள் நடைபெறாமல் தடுப்பதற்கும், பாதுகாப்பு நடைமுறைகளை மேற்கொள்வதற்கும், போதுமான மற்றும் தொடர்ச்சியான மேற்பார்வை வழங்குவது வேலையளிப்பவரின் பொறுப்பாகும்.

இதற்கு மாறாக எண்.99, அவிநாசி ரோடு, கோயமுத்தூர் என்ற முகவரியில் அமைந்துள்ள கோவை மெடிக்கல் செண்டர் மற்றும் மருத்துவமனை வளாகத்தில் நடைபெறும் 6 மாடிகள் கொண்ட புற நோயாளிகள் பிரிவு கட்டுமான பணியில் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், விபத்துகள் நடைபெறாமல் தடுப்பதற்கும், பாதுகாப்பு நடைமுறைகளை மேற்கொள்வதற்கும் போதுமான மற்றும் தொடர்ச்சியான மேற்பார்வையை வேலையளிப்பவரால் மேற்கொள்ளப்படாததால் 27.06.2024 அன்று பிற்பகல் 05.10 மணி அளவில் சீனிவாசன் அசோசியேட்ஸ் பிரைவேட் லிட் என்ற ஒப்பந்ததாரர் நிறுவனத்தின் தொழிலாளி திரு. ரமேஷ் குமார், வயது 27, த/பெ. பஜன் மண்டல் என்பவர் 6 வது மாடியில் கட்டுமான பணி மேற்கொண்டபோது 70 அடி உயரத்திலிருந்து கீழே விழுந்து படுகாயமடைந்துள்ளார். அவரை உடன் கோவை மெடிக்கல் செண்டர் மற்றும் மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது அங்கு அவர் மரணமடைந்ததை மருத்துவர்களால் உறுதி செய்யப்பட்டது என்பதை 01.07.2024 அன்றைய கூட்டாய்வின்போது கண்டறியப்பட்டது.

இது பிரிவு 44 ன்கீழ் முரணாகும்.

4. <u>பிரிவு 39 (1) விதி 210 (1) (a) (b) உடன் விதி 210( 7):</u>

கட்டுமான பணியில் ஏற்படும் மரணவிபத்து குறித்த செய்தியை விபத்து நடந்த 4 மணி நேரத்திற்குள் தொலைபேசி அல்லது தனிநபர் வாயிலாக சென்னை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களுக்கும். அதனை தொடர்ந்து Tamil Nadu Rationalisation of Forms and Reports Under Certain Labour Laws Rules 2020-ல் தெரிவிக்கப்பட்டுள்ள படிவம் XI படியான விபத்து குறித்த அறிக்கையை, மதுரை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர்(BOCW) அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

அதற்குமாறாக 27.06.2024 அன்று பிற்பகல் 05.10 மணி அளவில் நிகழ்ந்த மரணவிபத்து குறித்த செய்தியை விபத்து நடந்த 4 மணி நேரத்திற்குள் தொலைபேசி அல்லது தனிநபர் வாயிலாக சென்னை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களுக்கும் அதனை தொடர்ந்து படிவம் XI படியான விபத்து குறித்த அறிக்கையை, மதுரை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர்(BOCW) அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்படவில்லை.

இது பிரிவு 39 (1) விதி 210 (1) (a) (b) உடன் விதி 210(7)ன் படி கடும் முரணாகும்.

29/7/24

இணை இயக்குநர் (BOCW),
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,
மதுரை.